தோற்றம் : 1971

அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt.22.03.1980)

## TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION

TNGCTA நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. Ph : 28516573 Telefax : 28414354

| | | |
|---|---|---|
| பேரா. சீ. தமிழ்மணி<br>தலைவர் | முனைவர். எல். பிரதாபன்<br>பொதுச்செயலர் | முனைவர். சி. திருச்செல்வம்<br>பொருளர் |

| | |
|---|---|
| முனைவர். இரா. வெங்கடாசலம்<br>முனைவர். உஷா ரகோத்தம்<br>துணைத் தலைவர்கள் | பேரா. சோ. சுரேஷ்<br>முனைவர். ச. காமாட்சி<br>இணைச் செயலர்கள் |


சுற்றறிக்கை எண். 33 நாள் : 23.07.2014

இனிய தோழர்களே, தோழியரே!

வணக்கம். மாநில ஆட்சிக்குழுத் தேர்தல் தொடர்பாக சென்னை, மூன்றாவது விரைவு நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், தேர்தலை 13.07.2014 அன்று நடத்த திட்டமிடப்பட்டு அதற்கானப் பணிகள் நடைபெற்றுவந்தன. இந்தத் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்ய கால அவகாசம் கோரி எதிர்தரப்பினர் அதே நீதிமன்றத்தில் முறையீடு செய்ததன் அடிப்படையில் தேர்தல் தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் செல்லத்தக்க வகையில் 13.06.2014 அன்று வழங்கப்பட்ட நீதிமன்ற ஆணையை 21.07.2014 வரை நிறுத்திவைப்பதாக நீதிமன்றம் ஆணை வழங்கியது. மூத்த வழக்குரைஞரின் ஆலோசனைப்படி 13.07.2014 அன்று நடைபெறவிருந்த வாக்குப் பதிவை ஒத்திவைக்க ஆட்சிக்குழு முடிவு செய்து, அச்செய்தியை கிளை/மண்டலப் பொறுப்பாளர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பியிருந்தோம்.

தேர்தல் நிறுத்திவைப்பதற்காக நீதிமன்றம் வழங்கிய கால அவகாசம் முடிந்தநிலையில் மீண்டும் ஆட்சிக்குழு 22.07.2014 அன்று மூத்த வழக்குரைஞரின் ஆலோசனைப் பெற்று, அதனடிப்படையில் வரும் 27.07.2014 ஞாயிறு அன்று நிறுத்தி வைக்கப்பட்ட தேர்தலுக்கான வாக்குப் பதிவை நடத்திட மாநிலத் தேர்தல் குழுவைக் கேட்டுக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. தேர்தல் குழு அதற்கானப் பணியினை மேற்கொண்டு, தனியாக சுற்றறிக்கையினை கிளைகளுக்கு அனுப்பிவைக்கும்.

**பொதுக்குழுக் கூட்டம்**

மாநிலத் தேர்தல் குழுவின் அட்டவணைப்படி 27.07.2014 அன்று வாக்குப்பதிவு நடைபெறும். வாக்குப்பதிவு நாளான 27.07.2014 ஞாயிறு அன்று பிற்பகலில், அமைப்பு விதிகள், தேர்தல், கோரிக்கைகளின் நிலை போன்ற கருதுபொருள்கள் குறித்து விவாதிக்க மாநில பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும். அன்றைய வாக்குப் பதிவிலும், பொதுக்குழுவிலும் அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்து கொள்வதை கிளை/மண்டலப் பொறுப்பாளர்கள் உறுதிசெய்து கொள்ளவும்.

**கோரிக்கைகள்:**

- ரூ.6000/–லிருந்து ரூ. 7000/– AGP கோப்பு, நிதித் துறையின் ஒப்புதலுக்காக உள்ளது. நிதித்துறை அமைச்சர், உயர்கல்வித் துறை அமைச்சர், நிதித்துறை இணைச் செயலாளர்கள் ஆகியோரை சந்தித்து கோரிக்கைகளை விளக்கி, விரைந்து ஆணைகள் பெற முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம்.
- 2009 TRB ஆசிரியர்களுக்கான பணிவரன்முறை கோப்பு, ஆசிரியர்களின் விவரங்கள் சரிபார்ப்பிற்குப்பின் அரசுக்கு அனுப்பப்படும்.
- ஒப்பந்தப் பணிக்காலத்தை ஓய்வூதியத்திற்கு கணக்கிலெடுக்கும் கோரிக்கை மீது விரைவில் ஆணைகள் பெறப்படும்.
- 01.01.1996 முதல் பணிமேம்பாடு, தொடர்ந்து ரூ. 14,940/– உயர்வூதியம் தொடர்பான கோப்பு, கோரப்பட்ட விவரங்களுடன், உயர்கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- முதல்நிலை கல்லூரி முதல்வர்களுக்கான பதவி உயர்வு அரசாணையை தொடர்ந்து இரண்டாம் நிலை கல்லூரி முதல்வர்களுக்கான பதவி உயர்வு ஆணை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.
- நிலுவையில் உள்ள பிற கோரிக்கைகள் மீதும், ஆணைகள் பெற ஆட்சிக்குழு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கிளை/மண்டலப் பொறுப்பாளர்கள், அனைத்து வாக்காளர்களையும் வாக்குப்பதிவில் பங்குபெற வைக்கவும், பின்னர் நடைபெறவுள்ள பொதுக்குழுவில் கலந்துகொள்ளவும் முயற்சிகளை மேற்கொள்ளவும். மாநிலத்திற்கான ஆண்டு சந்தாவினை தலைமைக்கு விரைந்து அனுப்பிடவும்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். –குறள்

திருச்சியில் சந்திப்போம்! தேர்தலை நடத்திடுவோம்!!
ஜனநாயகப் பாதையில் சென்றிடுவோம்!

தோழமையுடன்,

சென்னை–5
23.07.2014

(இல. பிரதாபன்)
பொதுச் செயலர்